திரு. என். டென்னிஸ் : இந்தத் திட்டம் எப்போது முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எப்போது முடிவு அடையும் என்ற தகவல் இல்லை. நீர் நின்றவுடன் வேலை துவங்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது.

தானிப்பாடியருகே வரட்டாற்றின் குறுக்கே அணை.

* 75 வினா.—**திரு. எம். எஸ். இராதாகிருட்டினன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் புதிய அணை ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் ஒரு புதிய அணை கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,84,600-க்கு அரசு அங்கிகாரம் கொடுத்துள்ளது. இத்திட்டத்தினால் 176 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப் படுகிறது. ஒரு டன் உணவின் விலை ரூ. 1,048 ஆகும்.

Sulagiri Dam

*76 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the investigation work of the construction of Vempatti Dam near Sulagiri village in Hosur taluk stands; and

(*b*) the total number of acres which can be brought under irrigation under this scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஓசூர் தாலுக்கா எம்பள்ளி கிராமத்தருகில் சூளகிரி சின்னாற்றின் குறுக்கே ஓர் நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் உள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகளும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.